# “இது ஒன்றுதான் எனக்குத் தெரியும்” [9:6-41]

*“பதில் அளிக்கப்பட்ட ஜெபங்கள்” சில வேளைகளில் நமது வாழ்வைச் சிக்கலாக்கி விடக் கூடும். நமது வாழ்வைச் சிறப்படையச் செய்யும் என்று நாம் நம்பியுள்ள சில விஷயங்கள் உண்மையில் நமது வாழ்வை அதிகம் கடினமானதாக்கி விடுபவைகளாய் இருக்கும். எடுத்துக்காட்டாக, லாட்டரியில் பரிசு வெல்லும் மக்களைப் பற்றிய விஷயத்தை எடுத்துக் கொள்வோம். ஒரு சில ஆண்டுகளுக்கு முன்பு, நியூயார்க் டைம்ஸ் ஞாயிறு பத்திரிக்கையானது[1] லாட்டரியில் பரிசு வெல்லுபவர்களைப் பற்றிய வரலாறு ஒன்றை வெளியிட்டு, லாட்டரியில் பரிசு வென்றது அவர்களுடைய வாழ்வை எவ்விதம் பாதித்தது என்று விளக்கப்படுத்திற்று. லாட்டரியில் பரிசு வெல்வது என்பது கலப்பானதொரு ஆசீர்வாதம் என்று இம்மக்கள் கருதியதாக அவர்கள் கண்டறிந்தனர். நல்ல வீடுகளையும் கார்களையும் வாங்குவதற்கு இப்பணம் அவர்களை அனுமதித்தது, ஆனால் இது எதிர்பாராத பிரச்சனைகளையும் அவர்களுக்குக் கொண்டு வந்தது.*

*லாட்டரியில் பரிசு வென்ற பலர், கடன்கள் தேவைப்பட்ட நீண்ட நாள் உறவினர்களிடமிருந்து தொலைபேசி அழைப்பைத் தவிர்ப்பதற்காகத் தாங்கள் கொண்டிருந்த தொலைபேசி எண்கள் அட்டவணையிலிருந்து பல எண்களை நீக்க வேண்டியதாயிற்று, தங்களுக்குச் சாதகமான நிலைகளை வாக்களித்த “முழுநிறைவான” முதலீட்டு ஆலோசனைகளைத் தரும் நிதி ஆலோசர்களை தவிர்க்க வேண்டியதாயிற்று, மற்றும் பணம் தேவைப்பட்ட மக்கள் தங்களின் துர்அதிர்ஷ்டவசமான கதைகளைக் கூறுவதைக் கேட்பதையும் அவர்கள் தவிர்க்க வேண்டியதாயிற்று. குறிப்பாக, மின் பொறியாளராயிருந்த டொனால்டு பிளேக்கிலி என்பவர் 1982ல் சுமார் 19 கோடி ரூபாய் லாட்டரி பரிசு பெற்றார். அவர் அந்த செல்வத்தை மகிழ்வுடன் அனுபவித்தாலும், பணமானது தனது உறவுமுறைகளை மாற்றிவிட்டது குறித்து அவர் புலம்பினார். பிளேக்கிலிக்கு சுமார் ஒரு லட்சம் ரூபாய் கடன் பட்டிருந்த நண்பர் ஒருவரிடத்தில் இவர் கடனைத் திருப்பித் தரும்படி கேட்ட பொழுது, அவர் இவர் மீது வெறுப்புணர்வு கொண்டார். அந்த நண்பர், “19 கோடி ரூபாய் வைத்துள்ள நீங்கள் ஏன் அற்பத் தொகையான ஒரு லட்ச ரூபாய்க் கடனைத் திருப்பிக் கேட்கின்றீர்கள்?” என்றார். பிளேக்கிலி, “பணத்தை இழப்பது எனது மனதிற்கு மிக கவலையாய் இருந்தாலும், ஒரு நண்பரை இழப்பது என்பது அதைவிட மிகவும் கவலையாக உள்ளது” என்று கூறினார். மேலும் அவர், தன்னுடன் பணியாற்றியவர்கள் தாம் லாட்டரியில் பரிசு வென்றதைக்*

குறித்து முதலில் மகிழ்ச்சியடைந்தனர் ஆனால் ஆறு மாதங்களுக்குப் பின் அவர்கள் மகிழ்ச்சி பொறாமையாக மாறிற்று என்றும் இதன் விளைவாக அவர் தமது வேலையை விட்டு விட வேண்டியதாயிற்று என்றும் கூறினார். ''பதில் அளிக்கப்பட்ட ஜெபமானது'' சில வேளைகளில் வாழ்வைச் சிக்கலாக்கக் கூடும்.

பிறவியிலேயே பார்வையற்றவராயிருந்த மனிதரை இயேசு எதிர் கொண்ட அந்த நாள் அம்மனிதரின் வாழ்வில் மிகவும் அற்புதம் நிறைந்த நாளாய் இருந்தது. பார்வையற்ற ஒவ்வொரு மனிதரும் பார்வை பெறும் படியாகவே ஜெபித்திருக்கின்றனர். இந்த மனிதர் தாம் பார்வையுள்ள வராயிருந்தால் என்ன செய்வார் என்பது பற்றி அடிக்கடி கனவு கண்டிருப்பார் என்பதில் சந்தேகம் இல்லை. பிறகு ஒரு நாள், எவ்வித முன்னறிவிப்புமின்றி ஒரு மனிதர் (இயேசு) அவரிடம் வந்து எல்லா வற்றையும் மாற்றினார். இயேசு தரையிலே உமிழ்ந்து சேறுண்டாக்கி அந்தச் சேற்றை அம்மனிதரின் கண்களில் பூசி, சீலோவாம் குளத்தில் சென்று கழுவும்படி கூறினார் (9:6). ''அப்படியே அவன் போய் கழுவி, பார்வையடைந்தவனாய்த் திரும்பி வந்தான்'' (9:7ஆ) என்று யோவான் அறிக்கை தந்தார். பார்வையற்றிருந்த அந்த மனிதரின் மாபெரும் ஜெபங்கள் பதில் அளிக்கப்பட்டிருந்தன! அம்மனிதர் தம் வாழ்வில் மிகக் கடினமான காலத்தின் தொடக்க நாள் அது தான் என்பதைப் பற்றி மிகவும் சிறிதளவே உணர்ந்திருந்தார்!

இந்தப் பாடத்திற்கான நமது வேத வசனப் பகுதியான 9:6-41, விசுவாசச் சாலையில் இருந்த ஒரு மனிதரின் வரலாற்றை எடுத்துரைக்கின்றது. இயேசு இவ்வரலாற்றை இயங்கச் செய்து, முடிவில் அதற்கு நிறைவாக கட்டளையும் விளக்கமும் தரத் திரும்பிய வேளையில், இவ்விபரமானது ஒரு காலத்தில் பார்வையற்றிருந்த மனிதர் மீதும், இயேசுவின் மீது அவர் கொண்ட விசுவாசப் பயணத்தின் மீதும் குறிப்பாய்க் கவனம் செலுத்திற்று. இவ்வசனப் பகுதியானது படிப்படியாய் விசுவாச வளர்ச்சி பெற்ற அம்மனிதரின் கூற்றுக்களினால் வசீகரிக்கத்தக்க ஒரு வகையில் சிறப்பிக்கப்படுகின்றது.

## "நான்தான் அவன்" (9:6-9)

அம்மனிதர் தமது பார்வையற்ற நிலையிலிருந்து குணப்படுத்தப்பட்ட உடன், நம்ப முடியாத அந்த நிகழ்ச்சி பற்றி அவரது அயலகத்தார் விவாதிக்கத்தொடங்கினர். சிலர், "இவன் உட்கார்ந்து பிச்சை கேட்டுக் கொண்டிருந்தவன் அல்லவா?" (9:8) என்று கேட்டார்கள். அதற்குச் சில மக்கள், "அவன் தான்" என்றார்கள், வேறு சிலர் "அவனுடைய சாயலா யிருக்கிறான்" என்றார்கள் (9:9). அவர்களின் விவாதமானது, ஒரு குடும்பத் தார் தங்களுக்கு மிகவும் அன்பாயிருக்கும் ஒருவர் மருத்துவமனையில் இருக்கையில் அந்நோயாளியின் முன்னிலையிலேயே அவரைப் பற்றிப் பேசி ஆனால் அவரைக் காணாது விட்டது போல உள்ளது! "அவர் எப்படி யிருக்கிறார் என்று நீங்கள் நினைக்கின்றார்கள்?" "அவர் இன்று சற்றுத் தேறியிருக்கிறார் என்று நான் நினைக்கின்றேன்." "ஓ! அதைப் பற்றி நான்

நிச்சயமாய் எதுவும் கூற முடியாது. இன்று அவர் அவ்வளவு சுகமாய்க் காணப்படவில்லை!" "மருத்துவர் என்ன கூறினார்?" "இவர் பிழைப்பார் என்று நீங்கள் நினைக்கின்றீர்களா?"

கடைசியில், குணமாக்கப்பட்ட மனிதர் தனக்காகத் தானே பேசி, "நான்தான் அவன்" (9:9) என்றார். அவர் தாம் புறக்கணிக்கப்படும்படி அனுமதிக்கவில்லை. பல ஆண்டுகளாய் அவர் பார்வையற்ற ஒரு பிச்சைக்காரராய் இருந்தாலும், ஒரு சில விஷயங்களில் அவர் நிபுணராய் இருந்தார், அவற்றில் ஒன்று தம்மைப் பற்றியதாகும்! அவர் தாம் பார்வையற்றிருந்தது உறுதி என்றும் இப்பொழுது தாம் பார்வை பெற்றுள்ளதையும் உறுதி என்றும் கருதினார், எனவே அவர், தாம் உண்மையென்று அறிந்ததைக் கூறினார்: "நானே அந்த மனிதன்!"

நம் ஒவ்வொருவருக்கும் கூட விசுவாசப் பயணமானது தனி நபர்கள் என்ற வகையில் நம்மைப் பற்றி நமக்கு ஏற்படுகின்ற விழிப்புணர்வுடன் தொடங்கலாம். நீங்கள் உங்கள் மேல் அதிகாரமுடையவராய் இருக்கின்றீர்கள். நீங்கள் ஒரு தனிநபர் என்பதிலும், உயிர் வாழும் ஒரு ஆத்துமா என்பதிலும் நிச்சயமாய் இருக்க முடியும். அறிவியல் அறிஞர்கள் உங்களைப் பற்றி ஒன்றும், உங்கள் முதலாளி உங்களைப் பற்றி மற்றொன்றும், மற்றும் உங்கள் குடும்பத்தினர் இன்னும் மற்றொன்றும் உங்களைப் பற்றிக் கூறலாம். இருந்த போதிலும், நீங்கள் வாழ்கின்றீர்கள், நீங்கள் ஒரு ஆவிக்குரிய ஜீவியாய் இருக்கின்றீர்கள், மற்றும் நீங்கள் இன்னும் முழுமையாய்ப் பெற்றிராத சிலவற்றை நீங்கள் தேடிக் கொண்டுள்ளீர்கள் என்று நீங்கள் அறிவீர்கள். விசுவாசச் சாலையில் நாம் பயணத்தைத் தொடங்குகையில், "நான் ஒரு மனிதன்!" என்று அறிவிக்கின்றோம்.

## "இயேசு சேறுண்டாக்கினார்" (9:10-12)

அம்மனிதனைத் தேவாலயத்தினருகில் பார்வையற்ற பிச்சைக்காரராய்க் கண்டிருந்தவர்களுக்கு, அம்மனிதரின் கூற்றானது அற்புதத்தினால் தொடக்கம் பெற்ற குழப்பத்தைத் தெளிவாக்கவில்லை. இந்தப் புதிரின் பகுதிகள் அவர்களின் சிந்தைகளில் ஏற்ற வகையில் பொருந்தி வரவில்லை. இப்படிப்பட்ட அற்புதங்கள் தினந்தோறும் - அல்லது என்றைக்காவது ஒரு நாளில் - நடைபெற்றதை அவர்கள் இதற்கு முன் கண்டதில்லை! வியக்கத்தக்க இந்நிகழ்ச்சி எவ்வாறு நடைபெற்றது என்று அவர்கள் அம்மனிதரைக் கேட்டனர். அவர் தம் கதையை எளிமையான, நேரடியான முறையில் கூறினார்: "இயேசு என்னப்பட்ட ஒருவர் சேறுண்டாக்கி, என் கண்களின்மேல் பூசி, நீ போய் சீலோவாம் குளத்திலே கழுவு என்றார். அப்படியே நான் போய்க் கழுவி, பார்வையடைந்தேன்" (9:11).

சமூகத்தில் பதவியோ அல்லது செல்வமோ இல்லாத இம்மனிதர், குறிப்பிட்ட சில கருத்துக்களில் உலகத்தின் மாபெரும் நிபுணராக இருந்தார் என்பதைச் செயல் விளக்கப்படுத்தினார். அவர் தாம் யார் என்பதில் மற்றும் தாம் அனுபவித்திருந்தது என்ன என்பதில் மிகுந்த நம்பிக்கையுடைவராயிருந்தார். அதே வழிமுறையில், விசுவாசப் பயணத்தில் உள்ள

எல்லா மக்களும் தங்கள் சொந்த வாழ்வில் நிபுணர்களாய் உள்ளனர். சிலர், "நான் இயேசுவைச் சந்திக்கும் முன்பு கசப்புணர்வுள்ளவனாயிருந்தேன்" என்று கூறக்கூடும். மற்றவர்கள், "இயேசு என்னை விடுவிக்கும்முன்பு நான் கட்டுப்பாடின்றி (அல்லது மாபெரும் வருத்தத்தில் அல்லது குடிகாரனாய்) இருந்தேன்'' என்று அறிவிக்கலாம். இப்படிப்பட்ட விஷயங்கள் பற்றி நீங்கள் மாபெரும் உறுதிப்பாட்டுடன் பேச முடியும், ஏனெனில் உங்கள் மேல் அதிகாரம் கொண்டவரும் மற்றும் உங்கள் வாழ்வில் இயேசு என்ன செய்துள்ளார் என்பதை அனுபவித்துள்ள யாவரும் நீங்கள் ஒருவரே ஆவீர்கள். இதை ஒருவரும் உங்களிடமிருந்து எடுத்துப் போட முடியாது!

## *"அவர் தீர்க்கதரிசி" (9:13-17)*

பிறவியிலேயே பார்வையற்றிருந்த மனிதருக்கு நடந்த விஷயமானது அவருடன் பழக்கமாயிருந்தவர்களுக்கு இன்னும் அறிவுப்பூர்வமானதாகக் காணப்படவில்லை, எனவே அவர்கள் அம்மனிதரை, மதக் கருத்துக்களில் நிபுணர்களான பரிசேயர்களிடம் கொண்டு சென்றனர். இயேசு அம்மனிதரைக் குணப்படுத்தியிருந்த நாள் ஓய்வுநாளாய் இருந்தது, அது யூதர்களுக்கு இளைப்பாறுதலுக்கான பரிசுத்த நாளாகும். இது அவர்களுக்கு ஒரு மாபெரும் சிரமத்தை முன் வைத்தது. ஓய்வுநாளில் குணமாக்குதல் எதையும் பற்றிச் சந்தேகம் கொண்டவர்களாக, அவர்கள் அம்மனிதரிடம் அவருக்கு நடந்தவற்றை மீண்டும் கூறும்படி கேட்டார்கள். அவர் அவ்வாறே கூறிய பொழுது, ''அந்த மனுஷன் ஓய்வுநாளைக் கைக் கொள்ளாததால் அவன் தேவனிடத்திலிருந்து வந்தவனல்ல" *(9:16)* என்று முடிவு செய்தார்கள். குணமாக்கும் நிகழ்ச்சியை ஆர்வத்திற்குரியதாகக் கண்ட பரிசேயர்களின் சிந்தையில் இது பிரச்சனையை அமர்த்தியிருந் திருக்கலாம். இருப்பினும், அம்மனிதருடன் பழக்கம் கொண்டிருந்த மக்கள், பரிசேயர்களின் பதிலால் திருப்தியடையவில்லை. யாராவது ஒருவர் தேவனிடத்திலிருந்து வராதிருந்தால் இப்படிப்பட்ட ஆச்சரியமான ஒரு அற்புதத்தை எப்படிச் செய்ய முடியும் என்று அவர்கள் வியப்படைந்தனர்.

மக்கள் இச்சூழ்நிலையைத் தொடர்ந்து விவாதிக்கையில், "அவர்களுக் குள்ளே பிரிவினை உண்டாயிற்று" *(9:16)*. யோவான் சுவிசேஷம் முழுவதி லும் இயேசு தம்மைக் குறித்த ஒரு முடிவை நோக்கி மக்களை நிலையாகத் தள்ளிக் கொண்டிருப்பதை நாம் காண்கின்றோம். மக்கள் தம்மைக் கண்டு கொள்ளாது விடுவதில் இயேசு திருப்தி கொள்ளாமல், அவர்கள் ஆதாரத்தைக் கவனித்து, தாம் தேவனிடத்திலிருந்து வந்தவரா அல்லது சாத்தானிடத்திலிருந்து வந்தவரா என்பதை முடிவு செய்யும்படி இயேசு வலியுறுத்தினார். இயேசு மற்றும் யோவான் ஆகியோரைப் பொறுத்த மட்டில் இரண்டுக்கும் பொதுவான நிலை என்று ஒன்றும் இருந்ததில்லை.

சலிப்புற்ற மக்கள், பிறவியிலிருந்தே பார்வையற்றவராய் இருந்திருந்த மனிதரிடம் மீண்டும் திரும்பி, அவர் இதைப் பற்றி நினைப்பதென்ன என்று கேட்டனர். விசுவாசத்தை நோக்கிக் குறிப்பிடத் தக்க இன்னொரு அடி எடுத்து வைத்த நிலையில் அம்மனிதர், "அவர் தீர்க்கதரிசி" *(9:17)* என்று

பதிலுரைத்தார். இதைக் கூறியதில் அந்த முன்னாள் பிச்சைக்காரர் - தம்மைப் பற்றியல்ல, ஆனால் தம்மைக் குணப்படுத்தியிருந்த மனிதரைப் பற்றி - ஒரு உறுதிப்பாட்டை ஏற்படுத்தினார். இம்மனிதர் (இயேசு) தேவனிடமிருந்து வல்லமையைப் பெற்றிருந்தார் என்பதே இவரது முடிவாயிருந்தது. இயேசு பொல்லாதவராயிருந்தார் என்று பரிசேயர்கள் எவ்வளவுதான் கூறினாலும், பார்வையற்றவராய்ப் பிறந்த இம்மனிதர், அவர் (இயேசு) நல்லவர் என்றும் அவரது வல்லமை தேவனிடமிருந்து வந்தது என்றும் உறுதியாக நம்பியிருந்தார்.

## "ஒன்றுதான் எனக்குத் தெரியும்" (9:18-25)

பார்வையற்றவராய்ப் பிறந்திருந்த மனிதரின் ஒவ்வொரு கூற்றுடனும் குழப்பமான நிலை வளர்ந்தது. இயேசு தேவனிடத்திலிருந்து வந்த தீர்க்கதரிசி என்ற (பார்வையற்ற மனிதராகிய) அவரின் விசுவாசத்தைப் பரிசேயர்கள் முற்றிலுமாகப் புறக்கணித்தனர். சிலர், இம்மனிதர்தான் உட்கார்ந்து பிச்சையெடுத்துக் கொண்டிருந்தவரா என்று கூடச் சந்தேகப்பட்டனர். ஆகையால் அவர்கள் அவரது பெற்றோரை அழைத்து அவர்களை விசாரித்தனர். "உங்கள் குமாரன் குருடனாய்ப் பிறந்தான் என்று சொல்லுகிறீர்களே, அவன் இவன்தானா? இவனானால், இப்பொழுது இவன் எப்படிப் பார்வையடைந்தான்?" (9:19). அம்மனிதரின் பெற்றோர் பயம் அடைந்தனர். எல்லாரும் அவர்களைக் கவனிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கவில்லை, மற்றும் சம்பவங்கள் முழுவதுமே அவர்களைப் பயமுறுத்தின. இயேசுவை ஆதரித்து எவராது சிலவற்றைப் பேசினால் கூட அப்படிப் பேசியவர் ஜெப ஆலயத்திற்குப் புறம்பாக்கப்படுவார் என்று கூட அவர்கள் கேள்விப்பட்டிருந்தனர் (9:22). தங்கள் நண்பர்கள், குடும்பத்தார் ஆகியோரையும், தங்கள் பிழைப்புக்கான வழியையும் இழந்து விடுவோம் என்ற பயத்தில் (நீண்ட காலத்திற்கு முன்பே தங்கள் மகனைப் பிச்சையெடுத்து வாழும்படிக் கை விட்டுவிட்ட இந்தத்) தாயும் தகப்பனும் மீண்டும் ஒருமுறை தங்கள் மகனை இம்மோதலில் கை விட்டு விட்டனர்: "இவன் வயதுள்ளவனாயிருக்கிறான், இவனைக் கேளுங்கள், இவனே சொல்லுவான்" (9:21) என்று அவர்கள் கூறினார்கள். அவர்களின் மகனுக்குப் பார்வை என்ற கொடை அளிக்கப்பட்டிருந்ததால் அந்த நாள் அவர்களின் வாழ்விலேயே மிகவும் மகிழ்ச்சியான நாளாய் இருந்திருக்க வேண்டும். அதற்குப் பதிலாக அது பயம் மற்றும் வெட்கத்தின் நாளாயிற்று.

கேள்வி கேட்டவர்கள் மீண்டுமாக அம்மனிதரிடம் திரும்பி, அவர் எப்படிப் பார்வையடைய முடிந்தது என்பதை விளக்கும்படிக் கேட்டனர். ''தேவனை மகிமைப்படுத்து'' என்று அவர்கள் வற்புறுத்தினர். இந்தச் சொல்விளக்கத்திற்கும் தேவனை ஆராதித்தல் அல்லது துதித்தல் என்பதற்கும் எவ்விதத் தொடர்பும் கிடையாது, ''உண்மையைச் சொல்'' என்று கூறுவதற்கான யூதருடைய ஒரு வழிமுறையாக இது இருந்தது.[2] இது ஒரு குற்றவாளி தான் குற்றம் செய்திருந்ததை ஒவ்வொருவரும் உறுதியாக அறிந்திருந்தும், இன்னமும் அக்குற்றத்தை ஒப்புக் கொள்ளாத நிலையில்

இருக்கையில் அவனிடத்தில் பேசும் வழிமுறையாயிருந்தது. பார்வையற்றுப் பிறந்த அம்மனிதன் மீது சலிப்பு, கோபம் மற்றும் பொறுமையற்ற தன்மை வளர்ந்ததை அவர்களது வார்த்தைகள், சுட்டிக்காட்டுகின்றன.

நாம் முன்பே கண்டுள்ளபடி, இம்மனிதர் தம்மிடம் கேள்வி கேட்டவர்களுக்குப் பதில் அளித்த பொழுது, அமைதியுடனும் நிச்சயமான நம்பிக்கையுடனும் பதில் அளித்தார். அவர்களிடத்தில் அவர், "அவர் பாவியென்று எனக்குத் தெரியாது; நான் குருடனாயிருந்தேன், இப்பொழுது காண்கிறேன்; இது ஒன்றுதான் எனக்குத் தெரியும்" (9:25). மதரீதியான விவாதத்தின் பல பகுதிகளில் இம்மனிதரால் நிலைநிற்க முடியாதிருந்திருக்க வேண்டும். அவர் பயமுறுத்தப்பட்ட பொழுது, உண்மைகளின் பக்கமாய்ப் பின்வாங்கி விழுந்தார்: "... நான் குருடனாயிருந்தேன், இப்பொழுது காண்கிறேன்; இது ஒன்றுதான் எனக்குத் தெரியும்."

## "அவர் தேவனிடத்திலிருந்து வந்தவர்" (9:26-34)

பார்வையற்றவராய்ப் பிறந்திருந்த மனிதரின் பிடிவாதமான உறுதியினால் சலிப்படைந்த பரிசேயர்கள் கேள்வி கேட்கும் செயல்முறையைப் புதிதாய் (மீண்டும்) தொடங்கினர் (9:26). சில ஆண்டுகளுக்கு முன்பு வெளிநாட்டுப் பயணம் ஒன்றில் நான் சந்தித்திருந்த வன்முறையாளர்களுக்குக்கெதிரான செயல்முறைகளை அவர்களின் தந்திரங்கள், எனக்கு நினைவூட்டுகின்றன. விமானப் போக்குவரத்துப் பணியாளர்கள் ஒவ்வொரு பயணியையும் தனியே அழைத்துக் கேள்விகள் பலவற்றைக் கேட்டார்கள். பிறகு, ஒரு சில நிமிடங்கள் கழித்து இன்னொரு பணியாளர் எங்களிடத்தில் அதே கேள்விகளைக் கேட்டார். கடைசியில், மூன்றாவது பணியாளர் ஒருவர் மீண்டும் ஒருமுறை அதே கேள்விகளைக் கேட்டார்! பிற்பாடு அந்த மூன்று பணியாளர்களும் ஒன்று கூடி நின்று தங்களின் குறிப்புகளை ஒப்பிட்டுப் பார்த்து நாங்கள் அம்மூவருக்கும் ஒரே விதமான பதிலை அளித்துள்ளோமா என்று சரி பார்த்தார்கள். அந்த நாளில் நாங்கள் கொண்டிருந்த அதே உணர்வை இந்தப் பார்வையற்றிருந்த மனிதர் கொண்டிருந்திருக்க வேண்டும்.

அதே கேள்வியை மீண்டும் எதிர்கொண்ட அம்மனிதர் அச்சூழ்நிலையில் சற்றுச் சுடு சொல்லை உட்புகுத்தத் தொடங்கினார். யூதத் தலைவர்கள் இயேசுவின் மீது ஆர்வம் கொண்டு அவருடைய சீஷர்களாக விரும்பியதால் தம்மிடத்தில் கேள்வி கேட்டார்களா என்று அவர்களிடத்தில் அவர் கேட்டார் (9:27). யூகித்தபடியே அவர்கள் மிகவும் கோபமடைந்தனர். பிறகு அவர்களிடத்தில் பேசுவதற்கான கடைசி வாய்ப்பில், பார்வையற்றவராய்ப் பிறந்திருந்த அம்மனிதர், இஸ்ரவேலில் மிகவும் அறிவுக் கூர்மையும் மிகச் சிறந்த பயிற்சியும் பெற்றிருந்த சிந்தனையாளர்களின் சிந்தனையிலிருந்த சீரற்ற தன்மையைச் சுட்டிக்காட்டினார். பிறவியிலிருந்தே பார்வையற்றிருந்த ஒரு மனிதரைக் குணமாக்கியது போன்ற அவ்வளவு பெரிய அற்புதத்தை ஒருவரும் ஒருக்காலும் கேள்விப் பட்டதில்லையென்று அவர் உரிமைகோரினார். அது உண்மையிலேயே

*மிகவும் அற்புதமான ஒரு செயலாய் இருந்தது. நிச்சயமாகவே அந்த அற்புதம் தேவனிடமிருந்து வந்ததாயிருந்தது; இருப்பினும் தாங்கள் தேவனிடத்தில் நெருக்கமாய் இருந்ததாக நம்பியிருந்த பரிசேயர்கள், இயேசு எங்கிருந்து வந்தவர் என்பது பற்றியோ அல்லது அவர் செய்திருந்தது என்ன என்பதை பற்றியோ கருத்து எதுவும் கொண்டிருக்கவில்லை. இயேசு தேவனிடத் திலிருந்து வராதவராயிருந்தால் இப்படிப்பட்ட செயலைச் செய்ய முடியாது என்பதே அம்மனிதரின் தைரியமான முடிவாயிருந்தது. அவர் "தேவனிடத் திலிருந்து வந்தவர்" (9:33) என்பதே அம்மனிதர் கூறியதன் சாராம்சமாக இருந்தது.*

*பார்வையற்றவராய்ப் பிறந்திருந்த அம்மனிதரால் சங்கடமுற்றிருந்த பரிசேயர்கள் வார்த்தைத் தடையொன்றை முன் வைத்தனர். அவர்களுக்கு அறிவுறுத்தும் தைரியம் அம்மனிதருக்கு எப்படிவந்தது? அவர் நியாயப் பிரமாணத்தை அறியாதவராகவும் பொறுப்புள்ள வகையில் சிந்திக்கக் கூடியவர் என்று நம்ப முடியாதவராகவும் இருந்தார். மற்றும், அம்மனிதர் முழுவதும் பாவத்தில் பிறந்திருந்ததாக அவர்கள் அறிவித்தனர். (வசனம் 2ல் பாவம் மற்றும் துன்புறுதல் பற்றிய சீஷர்களின் கேள்வியை நினைவில் வையுங்கள்.) அவர்கள் தங்களின் வார்த்தை வசவை முடித்த பின்பு "அவனைப் புறம்பே தள்ளி விட்டார்கள்" (9:34). அவரது பெற்றோர்கள் தங்களுக்கு என்ன நடக்கும் என்று பயந்தார்களோ, அதையே அவர்கள் (பரிசேயர்கள்) அம்மனிதருக்குச் செய்தார்கள் என்பது உறுதி; அவர்கள் அவரை ஜெப ஆலயத்திலிருந்து வெளியேற்றி விட்டனர்.*

*பார்வையற்றவராய்ப் பிறந்திருந்த இம்மனிதரின் அனுபவமானது நமக்கு, இயேசுவின் மீதுள்ள விசுவாசமானது சில வேளைகளில் நமது வாழ்வைச் சிக்கலாக்கக் கூடும் என்பதை நினைவூட்டுகின்றது. இயேசு எப்பொழுதுமே வாழ்வை எளிமையானதாக்குகின்றார் என்ற கருத்தை நாம் எங்கிருந்து பெறுகின்றோம்? ஒளியும் இருளும் ஒரு சேர இருக்க முடியாது. விசுவாசம் என்பது எப்பொழுதுமே குடும்பங்களை அதிகம் அமைதி பெறச் செய்வதில்லை; சில வேளைகளில் இது அதிக போராட்டத்தை/மோதலை உண்டாக்குகின்றது. விசுவாசம் எப்பொழுதுமே திருமணங்களை அமைதி யாக்கி விடுவதில்லை; சில வேளைகளில் அது போராட்டத்தில் பெரிய ஆதார மூலமாகி விடுகின்றது. விசுவாசமானது வேலையின் விஷயங்களை எப்பொழுதுமே சுலபமாக்கி விடுவதில்லை; சில வேளைகளில் அது ஒரு நபரை வேலையிழக்கச் செய்து விடுகின்றது. ஒருமுறை இயேசு பின்வருமாறு கூறினார்:*

> *நான் பூமியிலே சமாதானத்தை உண்டாக்க வந்தேன் என்று நினைக்கிறீர்களா? சமாதானத்தையல்ல, பிரிவினையையே உண்டாக்க வந்தேன் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். எப்படியெனில், இது முதல் ஒரே வீட்டிலே ஐந்து பேர் பிரிந்திருப்பார்கள், இரண்டு பேருக்கு விரோதமாய் மூன்று பேரும், மூன்று பேருக்கு விரோதமாய் இரண்டு பேரும் பிரிந்திருப்பார்கள். தகப்பன் மகனுக்கும் மகன் தகப்பனுக்கும், தாய் மகளுக்கும் மகள் தாய்க்கும், மாமி மருமகளுக்கும் மருமகள் மாமிக்கும் விரோதமாய்ப் பிரிந்திருப்பார்கள் என்றார் (லூக். 12:51-53).*

சில வேளைகளில் விசுவாசம் கொண்டு வரக்கூடிய எல்லா வித இடர்ப்பாட்டின் காரணமாக, நாம் பின்வாங்கித் திரும்பும்படியாகச் சோதிக்கப்படலாம். இருப்பினும் பார்வையற்றவராய்ப் பிறந்திருந்த அம்மனிதர் (ஒன்றுக்கு மேற்பட்ட வழிமுறைகளில்) ஒளியைக் கண்டிருந் தார், அவரைப் பொறுத்தமட்டில் பின் வாங்கித் திரும்புதல் என்பது இல்லாதிருந்தது. அவர், தாம் விசுவாசித்தது என்ன என்பது பற்றி உறுதியாய் இருந்தார், மற்றும் தாம் உண்மை என்று அறிந்த விஷயத்திலிருந்து பின் வாங்கிச் செல்லும்படி எவரொருவரும் அவரைப் பயமுறுத்தப் போவதில்லை.

## "நான் விசுவாசிக்கிறேன்" (9:35-41)

இந்த மனிதருக்கு இவ்வளவு அதிகமானது இவ்வளவு விரைவாக நடந்திருந்தது! அவரது வாழ்வில் மாபெரும் நாளானது மிகவும் போராட்டமான மற்றும் மிகவும் விலையேறப்பெற்ற நாளாகவும் ஆயிற்று. அவர் தமது பார்வையைப் பெற்றிருந்தார், ஆனால் ஜெப ஆலயத்திலிருந்து வெளியே தள்ளப்பட்டிருந்தார். கடைசியில், அவர் தம் அயலகத்தார்களின் முகங்களைக் காண முடிந்திருந்தது, ஆனால் அவர் கண்ட அந்த முகங்களோ கோபத்தினாலும் குழப்பத்தினாலும் நிறைந்திருந்தன. அவர் தமது சமூகத்தினர் மத்தியில் தமது இடத்தைப் பெற முடியாதிருந்தது, ஏனெனில் அவர் தாம் ஒரு பாகமாயிருக்க ஏங்கியிருந்த அந்தப் பொது மக்களால் திட்டப்பட்டும் தீர்வையிடப்பட்டும் இருந்தார். இந்த இக்கட்டான சூழ்நிலை அவரது தலைப்பில் சுழன்ற வேளையில், அவருக்குப் பழக்கமான குரலுடையவரால் ஆனால் இதற்கு முன் அவர் ஒருக்காலும் (தம் கண்களால்) கண்டிராத ஒருவருடைய - இயேசுவினுடைய - குரலினால் வாழ்த்தப்பட்டார்!

அவர் தேவனுடைய குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கின்றாரா என்று இயேசு அவரிடத்தில் கேட்டார். இந்தக் கேள்வியினால் குழப்பம் அடைந்தாலும், இதைக் கேட்டவர் மீது பற்றுறுதி கொண்ட அம்மனிதர், "ஆண்டவரே, அவரிடத்தில் நான் விசுவாசமாயிருக்கும்படிக்கு அவர் யார்?" (9:36) என்று கேட்டார். இயேசு தாமே தேவனுடைய குமாரன் என்று அவரிடத்தில் கூறினார். அதைக் கேட்ட அம்மனிதர் "ஆண்டவரே, விசுவாசிக்கிறேன்" (9:38) என்று அறிக்கையிட்டு அவரைப் பணிந்து கொண்டார். அம்மனிதரின் விசுவாசத்தை நோக்கிய பயணமானது ஒரு மைல் கல்லை அடைந்திருந்தது. இப்பொழுது அவர் "நான் விசுவாசிக்கிறேன்" என்று கூற முடிந்திருந்தது.

இவ்வரலாறு விரித்துரைக்கப்படுகையில், இம்மனிதரின் விசுவாசத்தில் படிப்படியான வளர்ச்சி ஏற்பட்டதைக் கவனியுங்கள். அவர், "நான்தான் அவன்" என்பதிலிருந்து, "இயேசு என்னப்பட்ட ஒருவர் சேறுண்டாக் கினார்" என்பதற்கும், பின் "அவர் தீர்க்கதரிசி" என்பதற்கும் பின், "இது ஒன்றுதான் எனக்குத் தெரியும்" என்பதற்கும் பின், "விசுவாசிக்கிறேன்" என்பதற்கும் சென்றார். இவை ஒவ்வொன்றுமே, அவர் அவ்வேளையில்

*புரிந்து கொண்டிருந்தவற்றின் அடிப்படையில் எடுத்து வைக்கப்பட்ட கவனம் நிறைந்த அடிவைப்பாக இருந்தது. அறியாத ஒன்றினுள் அவர் ''விசுவாசத்தின் அவசரத் தாவுதலை'' ஏற்படுத்தாமல், விசுவாசத்தை நோக்கிய உறுதியான, நிச்சயமான அடிவைப்புப் பயணத்தையே அவர் மேற்கொண்டார்.*

## முடிவுரை

*இயேசு, ''நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன்'' (9:5) என்று தம்முடைய சீஷர்களிடம் கூறினார். நமது உலகம் பாவம் என்ற கனத்த இருளினால் போர்த்தப்பட்டுள்ளது. இருளானது ஒளியைச் சகித்துக் கொள்ள முடியாது, ஏனென்றால் இவ்விரண்டும் முரணானவைகளாய் உள்ளன. நீங்கள் வெளிச்சத்தின் நபரானால், இருளின் சக்திகளுக்கெதிரான ஒரு உக்கிரமான யுத்தத்தில் நீங்கள் இருப்பதைக் காண்பீர்கள். நீங்கள் அவைகளுக்கு எதிராக நிற்க முடியும்! நீங்கள் உங்களைப் பற்றியும், வாழ்வைப் பற்றியும், மற்றும் இயேசுவைப் பற்றியும் அறிந்துள்ளவை களைப் பற்றிக் கொண்டிருக்க முடியும். இதைச் செய்வதில், சூரியன் காலையில் தோன்றாவிட்டாலும் கூட நீங்கள் யார் என்பதிலும் மற்றும் நீங்கள் நம்புவது என்ன என்பதிலும் நீங்கள் உறுதியாயிருப்பீர்கள்.*

*பார்வையற்றவராய்ப் பிறந்திருந்த அம்மனிதர் தாம் குணமான நாளில் எதிர்கொள்ள வேண்டியிருந்த போராட்டங்கள் எல்லாவற்றையும் கற்பனை செய்திருக்க முடியாது. இருப்பினும், தாம் பார்வை பெறுவதால் எதிர்கொள்ளப்போகும் இடர்ப்பாடுகள் யாவற்றையும் அவர் அறிந்திருந் தாலும், தாம் பார்வையற்று இருப்பதை விட பார்வையோடு இருப்பதையே அவர் தேர்ந்து கொண்டிருப்பார் என்று நாம் நம்புகின்றேன். இயேசு உண்மையாகவே ''உலகின் ஒளியாயிருக்கின்றார்.'' இன்றைய நாளில் ஒளியிடம் வரும்படிக்கே அழைப்பு விடுக்கப்படுகின்றது.*

---

குறிப்புகள்

[1]*New York Times Sunday Magazine*, 31 January 1993, xiii-NJ-4:6. [2]*யோசுவா 7:19ஐக் காணவும்.*